தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பாதுகாப்பு அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானப் பெறுவனவு

அமைச்சுக்கு உரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
வருமானக் குறியீடு 20.03.06.00 – ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் கடமைகளில் இருந்து கிடைத்த உள்ளபடியான வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதி ரூபா 3,116.89 மில்லியன் ஆக இருந்த போதும் அந்த வருமானத்தை சேகரிக்கின்ற இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை விமானப் படையினால் முறையே 2025 சனவரி 31 ஆம் திகதி மற்றும் 2025 பெப்ரவரி 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற உள்ளபடியான வருமானம் ரூபா 3,064.33 மில்லியன் ஆனமையால் ரூபா 52.56 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.	திறைசேரி அச்சிடலின் பிரகாரம் இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை விமானப் படையினால் திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டுள்ள ரூபா 3,203.75 மில்லியன் மற்றும் அதில் குறைக்கப்பட்ட ரூபா 86.86 மில்லியன் மீள செலுத்துதல் சீராக்கப்பட்ட பின்னர் செலவு வைக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 3,116.89 மில்லியன் ஆக சரியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இராணுவத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வருமானம் தொடர்பான பெறுமதிக்கும் இடையே ரூபா 52.56 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	ஆண்டிற்குரிய சரியான வருமானம் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வைப்புக்களை செலுத்ததல் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு தலைமையக கட்டிட நிர்மான செயற்திட்டக் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 918.069 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 129.9 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட உரித்துக் கோராத நிறுத்தி வைத்தல் பணம் ஆகும். ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் உரிய ஒப்பந்தகாரர் உரிய ஒப்பந்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தி அடைந்த பின்னர் உரித்து கோரப்படாது இருக்குமாயின் காலாவதியான வைப்பாகக் கருதி நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இணையான ஏனைய ஒப்பந்தங்களுடன் இணைந்துள்ள சில ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை, ஒப்பந்தம் முடிவடைந்திருந்த போதும் பழுதுபார்த்தல் காணப்பட்டமை மற்றும் கையளித்தல் மற்றும் கையேற்றல் உரிய பிரகாரம் மேற்கொள்ளாமை, நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்குமாறு கோரிக்கை கிடைக்காமை போன்ற விடயங்களின் காரணமாக நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ஒப்பந்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தி அடைந்த பின்னர் உரித்து கோராத வைப்புக்களை அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	2018 திசெம்பர் 31 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 இன் ஆலோசனையின் பிரகாரம் அரசாங்கத்திற்குரிய சகல காணிகளும் மதிப்பீடு செய்து அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் தேசிய மாணவர் படையணிக்குரிய ஹெக்ரேயர் 3.127 அளவான 03 காணிப் பகுதிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்தக் காணிப் பகுதிகளில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் காணியினை இனங்காணல், மதிப்பீடு செய்தல், பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(ii)	பாதுகாப்பு தலைமையகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தில் பாதுகாப்புத் தலைமையகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் மூலதன செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூலதன சொத்துக்களைக் கைப்பற்றுதல் (9152-61122 - ஏனைய இயந்திர உபகரணங்கள்) ரூபா 722,300,666 மற்றும் நடைமுறை வேலைகளின் கிரயம் (9160 - 61114) ரூபா 18,282,445,134 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 19,004,745,800 தொகை SA 82 நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் பாதுகாப்பு இராணுவ தலைமையக நிர்மாண செயற்திட்டத்திற்குரிய சொத்துக்களை இனங்கண்டு CIGAS முறைமையில் உள்ளடக்கப்படுவதுடன் 2025 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் கணக்கு பொழிப்புக்களின் மூலம் இந்த சொத்துக்களை அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	பாதுகாப்பு தலைமையக நிர்மாண செயற்திட்டத்தின் மூலதன செலவினங்களின் கீழ் மூலதன சொத்துக்களைக் கைப்பற்றுதல் மற்றும் நடைமுறை வேலைகளின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு நன்கொடையாகக் கிடைத்து பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட 78 நீர் பௌசர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அந்த வாகனங்களின் கணக்கீடு செய்யப்பட்ட கிரயமான ரூபா 40,170,000 கணக்குகளில் இருந்து அகற்றப்படாமையின் காரணமாக நிதியல்லா சொத்துக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட லொறி பௌசர் வண்டி சிகாஸ் முறைமையில் இருந்து அகற்றுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற அகற்றுதல் கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற 191 நீர் பௌசர்களில் அலகு கிரயமாக அதற்காக செலுத்தப்பட்ட சுங்க கட்டணமான ரூபா 515,000 மாத்திரம் இனங்காணப்பட்டமையால் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மிகுதியாக உள்ள வாகனங்களுக்குரிய சரியான மதிப்பீட்டு பெறுமதி சிகாஸ் முறைமையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சொத்துக்களின் சரியான மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்தல் வேண்டும்.

(ஈ) முற்பணக் கணக்கு மீதி

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ள மீதிகளைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய இலக்கம் 250/2016(i) என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தங்களுக்காக முற்பணங்களைச் செலுத்தும் போது சிகாஸ் முறையில் கணக்குகள் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதும் பாதுகாப்பு அமைச்சினால் பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 24 நிர்மாணப் பணிகளுக்குரிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் இருந்து எதிர்வரும் காலப்பகுதிக்குரிய ரூபா 159,720,255 வேலை முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் வாடகையும், வேலை முற்பணக் கணக்கும் மற்றும் வாடகையும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்குளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு தயாரிப்பதற்காக உரிய படிவங்கள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன் பாதுகாப்பு இராணுவ தலைமையக நிர்மாண செயற்திட்டத்திற்காக இவ்வாறான கணக்குகள் தயாரிக்கு இயலுமை காணப்படாது இருந்ததாகவும் வாய் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.	மிகுதி காலப் பகுதிக்கு உரிய கொடுப்பனவுகளின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள அரசாங்கத்திற்கு உள்ள உரித்துக்கள் உரிய பிரகாரம் ஏற்றுக் கொள்ளும் வகையில் வேலை முற்பண ஒதுக்க கணக்கு பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ii)	2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் இலக்கம் 250/2016 (3) மற்றும் (4) பந்திகளின் பிரகாரம் மற்றும் வாடகை மற்றும் வேலைகளுக்கான முற்பணம் செலுத்தும் போது, வாடகை மற்றும் வேலை முற்பண கணக்குகள் மற்றும் வாடகை வேலை முற்பண கணக்கு ஒதுக்க கணக்குகள் மூலம் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் பாதுகாப்பு பல்கலைக்கழக கல்லூரியினால் வாடகைக் கட்டிடம் ஒன்றிற்காக செலுத்தப்பட்ட ரூபா 17,259,000 வாடகை முற்பணம் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு தயாரிப்பதற்காக உரிய படிவங்கள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன் பாதுகாப்பு இராணுவ தலைமையக நிர்மாண செயற்திட்டத்திற்காக இவ்வாறான கணக்கு தயாரிக்கும் இயலுமை காணப்படாதிருந்ததாக வாய் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.	அரசாங்கத்திற்கு உள்ள உரித்துக்கள் உரியவாறு ஏற்றுக் கொள்ளும் வகையில் வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டில் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் ரூபா 59 மில்லியன் ஆக இருந்ததுடன் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 55.44 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதாவது 2024 ஆம் ஆண்டில் உள்ளபடியான வருமானம் ரூபா 80.40 மில்லியன் ஆனமையால் உள்ளபடியான வருமானம் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 145 சதவீத அதிகரிப்பாகும். அதனால் சாத்தியமானதாக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2015 யூலை 22 ஆம் திகதிய இலக்கம் 01/2015 என்ற அரச நிதி கொள்கை சுற்றறிக்கையின் 03 பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு சரியாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கு முடியுமான வகையில் பொருத்தமான வருமான மதிப்பீடு தயாரித்து அனுப்புமாறு சகல மாவட்ட செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.	சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்கு முடியுமான வகையில் பொருத்தமான வருமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	வருமானக் குறியீட்டு இலக்கம் 20.03.06.00 - ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் கடமைகளில் இருந்து கிடைத்த வருமானத் தலைப்பில் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 5,300 மில்லியனும், திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 3,127.74 மில்லியனும் ஆனமையால் அதற்கிடையே வேறுபாடு ரூபா 2,172.26 மில்லியன் அதாவது ஆரம்ப வருமான மதிப்பீட்டில் 41 சதவீதம் குறைவைக் காட்டியது. இவ்வாறு வருமான மதிப்பீட்டில் இடம் பெறுகின்ற கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்களின் தாக்கத்திற்கான	உரிய நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் அந்த இணக்கப்பாடுகளை நிறைவேற்றாமையின் அடிப்படையில் உரித்தற்று போன வருமானம் மற்றும் ஏனைய கழிப்பனவுகள் போன்றவற்றை இனங்காணக் கூடிய வகையில் ஆவணங்கள் 2025 ஆம் ஆண்டில் இருந்து எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உரித்தற்று போன வருமானம் மற்றும் ஏனைய கழிப்பனவுகளை போன்றவற்றை இனங்காணக் கூடிய வகையில் ஆவணங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

	காரணங்களை மேவுகை செய்யும் வகையில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் குறைத்தல்கள் போன்றவற்றை இனங்காணக்கூடிய வகையில் ஆவணங்கள் பேணிச் செல்லல் அமைச்சினால் மேற்கொள்ளபட்டிருக்கவில்லை. உறுதிப்படுத்தப்படவில்லை.		
(இ)	2024 ஆம் ஆண்டில் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 20.03.06.00 - ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் கடமைகளில் இருந்து கிடைத்த வருமானத் தலைப்பில் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 5,300 மில்லியனும், திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 3,127.74 மில்லியனும் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 2,172.26 மில்லியன் அதாவது ஆரம்ப வருமான மதிப்பீட்டில் 41 சதவீதம் (குறைவு) அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வருமான மதிப்பீட்டில் இடம் பெறுகின்ற கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்களின் தாக்கத்திற்கான காரணங்களை மேவுகை செய்யும் வகையில் ஆவணங்கள் பேணிச் செல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வில்லை.	உரிய நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் அந்த இணக்கப்பாடுகளை நிறைவேற்றாமையின் அடிப்படையில் உரித்தற்று போன வருமானம் மற்றும் ஏனைய கழிப்பனவுகளை போன்றவற்றை இனங்காணக் கூடிய வகையில் ஆவணங்கள் 2025 ஆம் ஆண்டில் இருந்து எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உரித்தற்று போன வருமானம் மற்றும் ஏனைய கழிப்பனவுகளை போன்றவற்றை இனங்காணக் கூடிய வகையில் ஆவணங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்கள் 20 இற்கு உரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 239.61 மில்லியன் நிதியேற்பாடுகளில் ரூபா 3.15 மில்லியன் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றுதல் தவிர ஏனைய எந்தவொரு செலவினமும் செய்யப்படாதிருந்தமையால் நூறு சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது.	பாதுகாப்பு அமைச்சரின் பதவியணியினரை நியமிக்காமை புதிய கட்டிடத்திற்காக பழுதுபார்த்தல் செலவினம் வரையறுக்கப்பட்டமை, செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை, பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை, மாணவர் படையணிக்கு தொடர்ச்சியான சேவைக்கு அறிக்கையிடும் போது செலுத்தப்படுகின்ற	நிதிப்பிரமாணம் 3 மற்றும் 4 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போதும், அங்கீகரிக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தும் போதும் நிதியாண்டில் நிறைவேற்ற கூடிய நிகழ்ச்சித் திட்டங்களின் எல்லையில்

		சம்பளங்களுக்கு இடையிலான இடைவெளி குறைந்தமை, சீரற்ற காலநிலையின் அடிப்படையில் பயிற்சி முகாம்கள் நடாத்தப்படாமை, கட்டுநிதி விடுவிக்கப்படாமை, இடர்களை குறைக்கும் செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாமை, அமைச்சரவை பத்திரம் அங்கீகரித்தல் தாமதம் அடைதல் அடிப்படையில் ஒப்பந்தங்களை கையளித்தல் தாமதம் அடைந்தமை போன்ற விடயங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது.	இருக்கின்றமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்கள் 45 இற்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 10,921.00 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 7,436.17 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் வீதமாகக் கவனத்தில் கொள்ளும் போது 50 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	ஒப்பந்தம் கையளித்தல் தாமதம் அடைந்தமை, பெறுகை செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தமை, ஒப்பந்தப் பட்டியல்கள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டமை, பாதுகாப்பு அமைச்சரின் பதவியணியினர் நியமிக்கப்படாமை, பாதுகாப்பு அமைச்சரின் மூலதன செலவினம் குறைவடைந்தமை, செலவின கட்டுப்பாடு, கட்டுநிதி விடுவிக்காமை போன்ற விடயங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது.	நிதிப்பிரமாணம் 3 மற்றும் 4 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போதும், அங்கீகரிக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தும் போதும் நிதியாண்டில் நிறைவேற்ற கூடிய நிகழ்ச்சித் திட்டங்களின் எல்லையில் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	43 செலவின விடயங்களுக்கு உரியதாக வழங்கப்பட்ட ரூபா 9,419.58 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 4,446.66 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தேறிய நிதியேற்பாட்டின் வீதமாகக் கவனத்தில் கொள்ளும் போது 20 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.	சீரற்ற காலநிலைமையின் அடிப்படையில் பயிற்சி முகாம்கள் நடாத்தப்படாமை, பெறுகை நடவடிக்கைகள் பிரச்சனைகளுடனான நிலைமை காணப்பட்டமை, திட்டமிடப்பட்ட இடர்களை குறைக்கும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாமை போன்ற விடயங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது.	அங்கீகரிக்கப்படுகின்ற நிதி, நிதி ஆண்டில் நிறைவேற்றக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(ஈ)	ரூபா 81.2 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த செலவின விடயம் ஒன்றுக்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலம் ரூபா 320	பதலளிக்கப்படவில்லை.	செலவினங்களை செய்வதற்காக மேலதிகமாக ஒதுக்கப்பட்ட

மில்லியன் மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் அந்த நிதியேற்பாட்டில் 86 சதவீதம் அதாவது ரூபா 277.05 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	நிதியேற்பாட்டை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2025 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது 2024 ஆம் ஆண்டிற்குரிய 50 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 4,626,545 ஆன செலவினம் 2025 ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகளில் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செலவினம் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,626,545 பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இவ்வாறான செலவினங்களை இனங்கண்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 94(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா மில்லியன்	இணங்காமைகள்		
(i)	சனாதிபதி செயலாளரின் 2022 செப்தெம்பர் 09 ஆம் திகதிய PS/CSA/00/1/4/1 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான கடிதத்தின் 3.1 ஆம்	-	அரசாங்க அமைச்சர்கள் / பிரதி அமைச்சர்களின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுகின்ற ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆகக் காண்பிக்கப்பட்ட போதும் 2024 சனவரி முதல் ஆகஸ்ட் வரையான	உரிய இராஜாங்க அமைச்சரின் அநுபவத்தின் பிரகாரம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட போதும் அமைச்சரால்	அரசாங்க செலவின முகாமைத்துவக் கடன் வகையில் விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பந்தி		காலத்தில் பிரதி அமைச்சருக்கு அமைச்சினால் மூன்று வாகனங்களும், இராணுவத்தால் ஒரு வாகனமும் ஆக 04 வாகனங்கள் மற்றும் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தப்படவில்லை.	
(ii)	2016 ஒக்தோபர் 04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்	211.6	பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதியில் இலக்கம் 06 இலக்கம் 07 மற்றும் இலக்கம் 08 என்ற கட்டிடங்களை விரைவாகப் பூர்த்தி செய்து தற்போது வாடகை அடிப்படையில் பேணிச் செல்லப்படுகின்ற அலுவலகத்தை அந்தக் கட்டிடங்களின் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சு செயலாளருக்கு உத்தரவு இடப்பட்டிருந்த போதும் பாதுகாப்புப்படை தலைமை அதிகாரியின் அலுவலகம் வாடகைக்கு பெறப்பட்ட கட்டத்தில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் வருடாந்த வாடகை ரூபா 60.47 மில்லியன் ஆகும். அதாவது 19,000 சதுர மீற்றர் அளவான 09 மாடிகளை கொண்ட இலக்கம் 08 கட்டிடம் 2021 ஆம் ஆண்டின் சனவரி மாதம் வரையில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் முன்னைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2021 மே மாதம் முதல் 2024 நவம்பர் வரை அண்ணளவாக ரூபா 211.6 மில்லியன் கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.	2021 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு அமைச்சு மற்றும் வாடகை கட்டிடத்தில் காணப்பட்ட அலுவலக இலக்கம் 08 கட்டிடத்தின் ஸ்தாபிக்கப்பட்ட துடன் பாதுகாப்பு தலைமை அதிகாரி அலுவலகத்திற்காக இடவசதிகள் காணப்படவில்லை.	அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வாடகைக் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற அலுவலக கட்டிடத்தில் இருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	நிதிப்பிரமாணம் 104(3)	முழுமையான அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாயின் ஆரம்ப அறிக்கை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் தேசிய மாணவர் படையணியில் இடம் பெற்ற இழப்பு நட்டம் தொடர்பாக அவ்வாறு ஆரம்ப அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்த 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	விரைவாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமானம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை தாமதம் இன்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	நிதிப்பிரமாணம் 104(4)	இழப்பு நட்டம் ஏற்பட்ட திகதியில் இருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் தேசிய மாணவர் படையணியின் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 17 கோவைகளைப் பரீட்சித்த போது அதில் 13 கோவைகளிலும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.	மாணவர் படையணிக்குரிய படையணியின் தீவின் பல்வேறு பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் விரைவாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	திறைசேரி செயலாளரின் 2022.06.02 ஆந் திகதிய அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் பாதுகாப்பு செயலாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம்	மேற்கூறிய கடிதத்தின் மூலம் முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்களுக்கு மாத்திரம் வாகனம் பயன்படுத்துவதை வரையறுத்தல், உத்தியோக பூர்வ வாகனம் உரித்தான	அத்தியவசிய கடமைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு, இடர் முகாமைத்துவம் பேன்ற அத்தியாவசிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்த வாகனம் பயன்படுத்தப்பட்	அரசாங்க செலவின கட்டுப்பாடு தொடர்பான திறைசேரி ஆலோசனைகளுக்கு இணங்க உத்தியோகபூர்வ வாகனம் உரித்துடைய உத்தியோகத்தர்களுக்காக ஒரு

		உத்தியோகத்தர்களுக்காக ஒரு வாகனத்தை மாத்திரம் ஒதுக்குதல் என்பவற்றை உள்ளடக்கி மேலதிக எரிபொருள் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கான திட்டமும் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அமைச்சுக்கு நியமிக்கப்பட்டிருந்த இராணுவ உத்தியோகத்தரினால் உள்ளபடியான சேவை நிலையத்தில் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் எரிபொருள் வழங்கப்பட்டிருக்கும் போது அமைச்சுக்குரிய வாகனம் மற்றும் எரிபொருள் பயன்படுத்தியிருந்த சந்தரப்பங்கள் காணப்பட்டமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	டுள்ளதுடன் வாகன பயன்பாட்டை வரையறுப்பதற்கு, எரிபொருளை வரையறுப்பதற்கும் ஆகக் கூடிய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வாகனம் மாத்திரம் பயன் படுத்தப்படல் வேண்டும்.
(vi)	2015 யூலை 20 ஆந் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் இலக்கம் 1/2015 இன் (05) ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(ஐ)	மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொருளாதார நிலைமைகளில் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு தேவையான போது பல்வேறு சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் கால ரீதியில் திருத்த வேண்டிய போதிலும் 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்த) சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணம் காலரீதியில் திருத்துதல் மேலும் தாமதம் அடைந்து காணப்பட்டது. அமுலில் உள்ள வரி அளவைக் கவனத்தில் கொள்ளும் மிகவும் குறைந்த வருடாந்தக் கட்டணத்தின் அடிப்படையில் அனுமதிப் பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திர புதுப்பித்தல் அமுல்படுத்தப்படுகின்றமையால் 29 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில்	1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்த) சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரக் கட்டணத்தை திருத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகளுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு 2025.05.08 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது.	தாமதம் இன்றி கட்டணத்தை திருத்துவதன் மூலம் வருமான உரித்தற்று போவதை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		கட்டணத் திருத்தங்களை மேற்கொள்ளாமையின் காரணமாக கவனத்தில் கொள்ளக் கூடிய அரசாங்க வருமானம் வருடாந்தம் இழக்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.		
(vii)	துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 182 ஆம் அதிகாரத்தின் 22(1) மற்றும் 29(1) ஆம் பிரிவுகள்	ஏதாவது ஒரு நபர் ஒருவரினால் துப்பாக்கியை வைத்துக் கொள்வதற்கோ அல்லது உடமையாக்கிக் கொள்வதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும். 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காத துப்பாக்கிகளின் எண்ணிக்கை 7,125 ஆகும். அவ்வாறே துப்பாக்கிச் கட்டளைச் சட்டத்தின் 182 ஆம் அதிகாரத்தின் 29(1) ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப் பத்திரம் செல்லுபடித் தன்மை முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த துப்பாக்கி மற்றும் அனுமதிப் பத்திரம் அனுமதிப்பத்திர அதிகாரத் தரப்பினருக்கு கையளிப்பதற்கும் அனுமதிப் பத்திர அதிகாரியினால் வழங்கப்படுகின்ற நிலையம் ஒன்றில் அந்த துப்பாக்கிகள் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்தமையும் அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காத மேற்கூறப்பட்ட 7,125 அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தப்படவில்லை.	வருடாந்தம் புதுப்பிக்கப்படாத துப்பாக்கிகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபரிடம் இருந்து கிடைத்த அறிக்கையை கவனத்தில் கொண்டு அது தொடர்பாக மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்து எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிகள் தொடர்பான தகவல் முறைமை ஒன்று தேவை இனங்கண்டு அதன் ஆரம்ப கட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.	அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத துப்பாக்கிகள் தொடர்பாக துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் 182 ஆவது அதிகாரத்தின் 29(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(viii)	2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	124.26	கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் விற்றுத் தீர்க்கப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் உரிய காலாண்டு இறுதியின் போது கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டு போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124,258,905 சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் கொம்ரோலர் ஜெனரால் இற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.	கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்தால் அறிமுகப்படுத்த ப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல் முறைமைக்கு உரிய தரவுகள் உள்ளடக்கப்பட் டுள்ளதுடன் ஏனைய சொத்துக்கள் தொடர்பான முறைமை கட்டியொழுப்பிய தன் பின்னர் கொன்ரோலர் ஜனரல் அலுவலகத்தின் ஆலோசனையி ன் பிரகாரம் நாளதுவரையாக் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த அறிக்கை குறித்துரைத்த கால எல்லையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் அதிகாரப் பலம் இன்றி பின்வரும் கொடுப்பனவுகள் (கொடுக்கல் வாங்கல்கள்) மேற்கொள்ளப்பட்டிருந்தது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	இலங்கை இராணுவத்திற்குரிய / வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 11 வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு எரிபொருளுடன் பாதுகாப்பு அமைச்சின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்பட்டிருந்தமை இலங்கை இராணுவத்தால் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின்	விசேட பாதுகாப்பு கடமைகளுக்காக புலனாய்வு கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக போக்குவரத்துப் பிரிவினை உள்ளடக்கிய சகல பிரிவுகளுக்கும் அறிவிக்கும் இயலுமை காணப்படாது இருந்ததுடன் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப	ஏனைய நிறுவனங்களுக்கு உரிய வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தவிர்க்கும் பிரகாரம் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய

	நிர்வாகப் பிரிவினால் கையேற்கப்படாமல் இருந்தமையும், அந்த வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகப் பிரிவின் போக்குவரத்து குழாத்தில், பாதுகாப்பு அமைச்சின் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட வாகனங்கள் இல்லாது இருந்தமையும் அறிக்கையிடப்பட்டதன் காரணமாக வாகன பயன்பாட்டின் போது அரச செலவின முகாமைத்துவம் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.	இராணுவம் போன்ற நிறுவனங்களில் இருந்து இவ்வாறு வாகனங்கள் வழங்கப்பட்டு பயன்படுத்துதல் சிக்கலான பாதுகாப்பு மற்றும் மூல உபாயங்களுக்கு தேவையான காரணங்கள் ஏற்பட்டிருந்தது.	சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 2/2017 இன் பிரகாரம் பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை பதிவு செய்துள்ள நிறுவனங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்தல் வேண்டும்.
(ஆ)	2017 திசெம்பர் 21 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 2/2017 இன் பிரகாரம் வாகனங்களை பதிவு செய்துள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்தலோ அல்லது கையளித்தலோ மேற்கொள்ள வேண்டியிருந்தமையும் அவ்வாறு கையேற்கப்படாமல் இராணுவத்திற்குரிய இலக்கம் KG – 0349, CAF – 1086 மற்றும் CAF – 1094 என்ற வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக இராணுவ செலவின விடயத்தின் கீழ் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது.	அரசியலமைப்பு உறுப்புரையில் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி அவர்களின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய பாதுகாப்பு விடயம் தொடர்பில் கைவிட முடியாத மற்றும் தவிர்க்க முடியாத பொறுப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சு விடயப் பரப்பை தீர்மானிக்கும் வர்த்தமானி மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்ட பொறுப்புக்களின் பிரகாரம் தேவையின் பிரகாரம் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் வளங்களை கடமை ரீதியான தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.	ஏனைய நிறுவனங்களுக்கு உரிய வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தவிர்க்கும் பிரகாரம் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 2/2017 இன் பிரகாரம் பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை பதிவு செய்துள்ள நிறுவனங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்தல் வேண்டும்.
(இ)	இராணுவ இணைப்பு உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு செயலாளர் அலுவலகத்தை உள்ளடக்கிய பாதுகாப்பு பிரிவுகளுக்காக	சாதாரணமான அரசாங்கத்தின் அலுவலகம் ஒன்றில் அலுவலக நேரத்தில் மாத்திரம் இந்த அமைச்சின் கடமைகள் மேற்கொள்ளப்படாது	நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் மாதாந்த ஓட்டக் குறிப்புக்கள் தயாரித்து சமர்ப்பிக்க

முறையே 27 வாகனங்கள் மற்றும் 13 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த வாகனங்கள் பயன்படுத்தியவர்கள் மற்றும் ஓடப்பட்ட விடயங்களைக் காண்பிக்கும் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்கள் பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. அந்த உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களா அல்லது தற்போது அந்த வசதிகளுக்கு உள்ளபடியான சேவை நிலையத்தை பெற்றவர்களா (முப்படைகள்) என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	இருந்தமையால் இந்த வாகனங்கள் ஒதுக்கப்பட்டதுடன் பாதுகாப்புக் காரணங்கள் அடிப்படையில் இரகசிய அல்லது புலனாய்வு கடமைகள் தொடர்பான ஓட்ட குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்த முடியாதிருந்தது.	வேண்டியிருந்ததுடன் 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதி இலக்கம் 22/99 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த வாகனங்கள் உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களா எனவும் அல்லது தற்போது அந்த வசதிகள் உள்ளபடியான சேவை நிலையத்தில் (முப்படைகள்) பெற்றிருந்த உத்தியோகத்தர்களா என உறுதிப்படுத்தி பயன்படுத்துதல் வேண்டும்.

3.6 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்து வைத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
எந்தவொரு குறித்துரைத்த பணிக்காகவும் பதவிநிலை உத்தியோகத்தருக்கு ரூபா 100,000 ஆகக் கூடிய எல்லையின் கீழ் செயல் நிமித்த உபகட்டுநிதி வழங்க முடியுமாக இருந்ததுடன் அந்த உத்தியோகத்தரால் உரிய பணிகள் முடிவடைந்தவுடன் கட்டுநிதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 106 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 4,951,582 ஆன முற்பணத் தொகையைத் தீர்க்கும் போது 12 நாட்கள் முதல் 128 நாட்கள் வரையிலான காலதாமதம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	உள்ளகச் சுற்றறிக்கை விநியோகித்து தீர்க்கப்படாத முற்பணங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பணிகள் நிறைவு பெற்றவுடன் கட்டு நிதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	தேசிய நிவாரண சேவை நிலையத்தினால் மீள் குடியமர்த்தல் செயற்திட்டத்தின் கீழ் 5,025 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 4,898 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 1,179 வீடுகளின் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் 127 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த நலனாளிகள் தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆலோசனைக் கோவை ஒன்று மாவட்ட சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு நிர்மாணங்களைக் கைவிட்டிருந்த நலனாளிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகள் காணப்படவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீள் குடியமர்த்தல் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 583.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை மற்றும் ஆபத்தான பகுதிகளில் குடியிருப்பவர்கள் வெளியேற மறுத்தல் போன்ற காரணத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் வசிக்காத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.	2024 மற்றும் 2025 ஆண்டுகளின் போது உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக முறையே 79 மில்லியன் மற்றும் 50.6 மில்லியன் நிதியேற்பாடு மாவட்ட செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீள் குடியமர்த்தும் போது ஏற்பட்டிருந்த நடைமுறை ரீதியான பிரச்சனைகளுக்கான தீர்வினை உள்ளடக்கிய வழிகாட்டி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது.	எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 (இ) இன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 10	2026 ஆம் ஆண்டிற்காக தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் பொருத்தமான திட்ட முறைமை ஒன்றை பின்பற்றுவதற்கு	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் வளங்கள் செயலாற்றல் தோல்வியடையும்

	சதவீதத்திற்கு விஞ்சாத செயலாற்றல் காப்புறுதி ஒன்று பெறவேண்டியிருந்த போதும் முப்படைகளுக்காக உணவுப் பொருட்கள் பெறுகைகளின் போது அந்த ஒப்பந்தப் பெறுமதியில் 05 சதவீதமாகத் திருத்தப்பட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு படைகளுக்கும் உரிய வைக்கப்பட வேண்டிய செயலாற்றல் காப்புறுதி விகிதம் பல்வேறு சதவீதத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கேள்தாரரர்களுக்கிடையே முறுகல் ஏற்படுவதற்கும், கேள்வி ஆவணங்களில் பரஸ்பர கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடியதாக இருந்தது.	நடவடிக்கை எடுக்கப்படும்.	போது பெறுகை நிறுவனத்திற்கு போதியளவான பாதுகாப்பு ஒன்றை பெறக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் 8.9.1 இன் பிரகாரம் கேள்விதாரருக்கு உடனடியாக முறையான கையளித்தல் கடிதம் விநியோகித்து அந்த கம்பனி முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும் உணவுப் பெறுகையின் போது கேள்வி கையளித்தல் 47 நாட்கள் முதல் 86 நாட்கள் வரையிலான தாமதத்துடன் முப்படைகளினாலும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.	அதனால் இதன் பின்னர் குறித்துரைத்த காலத்தை விஞ்சுவதற்கு முன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முப்படைகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் மீளளித்தல் கடிதம் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	முப்படைகளுக்காகவும் பச்சை மற்றும் உலர்ந்த உணவுகள் வழங்குதல் தொடர்பான பெறுகைகளுக்கு உரியதான சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்வி நிபந்தனைகளில் காண்பிக்கப்படுகின்ற, கேள்விதாரர்களின் முன்னைய தகைமைகள் தொடர்பான குறிகாட்டிகள், உற்பத்தியாளரின் அதிகார சான்றிதழ் சமர்ப்பித்தல், காண்பிக்கப்பட்டுள்ள வியாபார பெயர் பதிவின் கீழ் கூறுவிலைகளைக் கோருதல்	பெறுகை நிறுவனமாக கேள்வி மதிப்பீட்டுக் குழு மற்றும் முப்படைகளுக்கு கேள்விதாரர்களின் முன்னைய தகைமைகள் தொடர்பாக அளவுகோல்களை இலகுபடுத்தி அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பெறுகையில் போட்டித் தன்மையை உச்ச அளவான பிரகாரம் தகைமை பெற்ற ஆர்வம் காண்பிக்கின்ற சகல தரப்பினர்களும் பெறுகைகளுக்கு பங்குபற்றுவதற்கான நியாயமான, சமமான ஆகக் கூடிய சந்தர்ப்பங்களை வழங்கும் வகையில் கேள்வி நிபந்தனைகள் விதிக்கப்படல்

	மற்றும் மாதிரிகளை சமர்ப்பித்தல், மரக்கறி, பழவகைகள் போன்றவைகளுக்காக தரச் சான்றிதழ் கோருதல் போன்றவைகளை உள்ளடக்கிய கேள்வி நிபந்தனைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக பெறுகைகளில் போட்டி நிலைமையை மேம்படுத்துதல் குறைவடைந்தமைக்கும், சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் உயர்வடைந்து செல்வதற்கும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால் முப்படைகளுக்கும் உரிய 147 முகாம்களுக்காக பல்வேறு உணவுகளில் 217 தொகுதிகளுக்குரிய வழங்கல் சந்தர்ப்பங்கள் 2,088 அளவில் காணப்பட்ட போதும் போட்டித்தன்மை வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் 24 வழங்குனர்களினாலும் சகல வழங்கல் சந்தர்ப்பங்களும் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டிருந்தது.		வேண்டும்.
(ஈ)	2019 திசெம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 08/2019 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 சனவரி 01 முதல் சகல அரசாங்க நிறுவனத்தினாலும் சந்தை விலை ஒப்பீட்டு முறைமை (Shopping Method) இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள், அரச இலத்திரனியல் பெறுகைகள் திட்டத்திற்கு இணங்க (e-GP system) மேற்கொள்ள வேண்டியிருந்த போதும் தேசிய மாணவர் படையணியினால் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து இலத்திரனியல் பெறுகைகள் முறைமையின் (www.promise.lk) பதிவு செய்தல், இணைப்பு உத்தியோகத்தரைப் பெயரிடல் (Liaison Officer) பெறுகைத்	அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் இலத்திரனியல் பெறுகை முறைமையில் (www.promis.lk) பதிவு செய்வதற்கும் அதனுடன் தொடர்புபடுகின்ற உத்தியோகத்தரை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச இலத்திரனியல் பெறுகை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	திட்டம் மற்றும் பெறுகை அறிவித்தல் போன்றவற்றை முறைமையில் தரவேற்றம் செய்தல் அல்லது வழங்குனர்களுக்கு அறிவித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(உ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3 ஆம் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் மாதிரிகள் காண்பிக்கப்பட்டதுடன் தேவையாயின் ஆகக் குறைந்த மாற்றங்களுடன் அந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்கள் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் தேசிய மாணவர் படையணியால் 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 127,147,840 பெறுகைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	குறித்துரைத்த பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை.	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்த மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்கள் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஊ)	76 ஆவது சுகந்திர தின விழாவிற்காக கபில நிற காலணிகள் 300 கொள்வனவு செய்வதற்கான ரூபா 3,876,300 பெறுகைகளுக்காக ரூபா 328,500 செயலாற்றல் பிணை முறி சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதும் வழங்குனர் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றல் பிணைமுறி இன்றி நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.	வழங்குனர் நிறுவனத்தால் செயலாற்றல் பிணை முறி இன்றி நடவடிக்கை எடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல கோரிக்கைக்காக பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.	அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் செயலாற்றல் தோல்வியடைகின்ற போது அதில் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதத்திற்கு குறையாத காப்புறுதி ஒன்றின் மூலம் பொறுப்புக்கள் தொடர்பாக கடப்பாடுகள் வெளிப்படுத்தி பெறப்படல் வேண்டும்.

(எ)	அமைச்சினால் பதிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர்களின் பட்டியல் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது ஒரே நபருக்கு உரிமையாக உள்ள சில நிறுவனங்கள் ஒரு வழங்குனர் தொகுதிக்குரிய பொருட்களை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டிருந்த சந்தரப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் ஏதாவது பெறுகைகளின் போது ஒரு வழங்குனருக்கு, சில நிறுவனங்களின் பெயரில் கேள்வி சமர்ப்பிப்பதற்கு இயலுமை காணப்படுகின்றமையால் போட்டி விலைகள் சமர்ப்பித்தல் தவிர்க்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	போலியான போட்டியாளர்கள் ஏற்படாத வகையில் பதிவு செய்த வழங்குனர்களின் பட்டியலை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
அமைச்சுக்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 12 மில்லியன் ஆன இலக்கம் KC-2275 என்ற டிபென்டர் வகையின் வாகனம் 2021 திசெம்பர் மாதத்தின் போது பழுதுபார்த்தலுக்கு அனுப்பப்பட்டிருந்த போதும், 2024 திசெம்பர் வரையிலும் பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கோ அல்லது வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ முடியாதிருந்ததுடன் வாகனத்தின் இருப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளுடான நிலைமை காணப்படுகின்றது.	இந்த வாகனத்தை பழுதுபார்த்தல் வெற்றியளிக்காமையின் காரணமாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஊடாக இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் இருப்பு தொடர்பாக போதியளவான ஏற்பாடுகள் வழங்கப்படல் வேண்டும்.

4.4 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	பாதுகாப்பு தலைமையக நிர்மாண செயற்திட்டத்தால் 1,530 மணல் கீயூப்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,057,700 தொகை திருகோணமலை மாவட்ட வன அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டிருக்கும் போது அந்த மணல் இருப்பில் 1,209 கியூப் கடற்படையினால் பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த தொகையை கடற்படையில் இருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் தீர்த்து வைத்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	கடற்படையினால் எந்தப் பணிகளுக்காக இந்த மணல் இருப்பு பயன்படுத்தப்பட்டது என உறுதிப்படுத்தி அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2021 ஆம் ஆண்டின் போது அமைச்சின் நுகர்வுப் பொருள் களஞ்சயத்தில் இனங்காணப்பட்ட ரூபா 16,769,458 பொருள் பற்றாக்குறை தொடர்பாக குழு அறிக்கை கோரப்பட்டிருந்த போதும் களஞ்சியப் பொறுப்பாளரின் மாதாந்த சம்பளத்தில் 25 சதவீதம் அதாவது ரூபா 9,207 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்தல் தவிர நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் 04 வருடங்கள் முதல் தாமதமடைந்து காணப்பட்டது.	நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை நடாத்துவதற்காக பரீட்சித்தல் சபை ஒன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கான கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தாமதம் இன்றி நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	அரசாங்க செலவினங்கள் மிகவும் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்துவதற்கும், கட்டிட நிர்மாணம் மற்றும் வாடகைக்கு எடுத்தல் போன்ற செலவினங்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தமையும் சிக்கமானதாக அரசாங்கத்தின் செலவினங்களைச் செய்வதற்கும், தேசிய பாதுகாப்புக் கல்லூரியினால் வார நாட்களின் சாதாரண அலுவலக நேரத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற பாடநெறிக்காக விரிவுரையாளர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ரூபா 34,518,000 வருடாந்த வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் 37 வீட்டு அலகுகள் பெறப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 835 மற்றும் 2024 சனவரி 10 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் 7.4 இன் பிரகாரம் திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறுவதற்கு முன் கேள்வி கையளித்தல் மற்றும் உடன்படிக்கையும் செய்யப்பட்டிருந்தது.	விரிவுரை வார நாட்களில் அலுவலக நேரத்தில் நடாத்தப்பட்டிருந்த போதிலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளின் பிரகாரம் வதிவிட பாடநெறியை நடாத்துதல் தேவையாக இருந்ததுடன் வலய ரீதியான அரசாங்கம் மற்றும் அமெரிக்காவினை உள்ளடக்கிய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அமுல்படுத்தப்படுகின்ற படிவத்தின் பிரகாரம் பேணிச் செல்வதற்கும் இராணுவ பதவியில் ஆட்சேர்க்கும் நிபந்தனைகளின் பிரகாரம் வதிவிட வசதிகள் வழங்கப்பட்டதன் காரணமாக கட்டிடம் வாடகைக்கு பெறவேண்டி ஏற்பட்டிருந்தது.	அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட இலக்கம் 03/2022, இலக்கம் 2/2023 மற்றும் இலக்கம் 1/2024 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட செலவினங்களைச் செய்வதற்கும், செலவினங்களைக் குறைப்பதற்குமான பிரமானங்கள் மற்றும் ஆலோசனை பின்பற்றப்படல் வேண்டும்.
(ஆ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9(ஆ) இன் பிரகாரம் கேள்வி மதிப்பிடுதல் கேள்வி கோரும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமை, நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ள வேண்டியிருந்த போதும் கட்டடம் வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு வழங்குனர் சமர்ப்பித்த கேள்வி ஆவணங்களின் பிரகாரம் வாடகை முற்பணத் தொகை தொடர்பாக குறிப்பிடப்படாது இருந்த போது கேள்வி கையளிக்கப்பட்ட பின்னர் கேள்விதாரரின் கோரிக்கையின்	கேள்வி கோரும் வரையிலும் பாடநெறி ஆரம்பிக்கப்படாது இருந்தமையால் கேள்வி கோரும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு புறம்பாக உடன்படிக்கை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.	கேள்வி மதிப்பீடு, கேள்வி கோரும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமை, நியதிகள், நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையும் பேணப்படல் வேண்டும்.

அடிப்படையில் 06 மாத முற்பணமாக ரூபா 17,259,000 வழங்கப்பட்டிருந்தது.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2015 யூலை 20 ஆந் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் (05) பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(ஐ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், பொருளாதார நிலமையில் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு, தேவையானவிடத்து பல்வேறு சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலரீதியில் திருத்த வேண்டியிருந்த போதிலும், 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்த) சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணம் காலரீதியில் திருத்துதல் மேலும் தாமதம் அடைந்து காணப்பட்டமை மற்றும் தற்போது அமுலில் உள்ள கட்டணங்களை கவனத்தில் கொள்ளும் மிகவும் ஆகக் குறைந்த வருடாந்தக் கட்டணம் அமுல்படுத்தப்படு கின்றமையால் 29 வருடங்களுக்கு அண்ணளவான காலமாக கட்டணத் திருத்தங்கள் மேற்கொள்ளாமையின் காரணமாக கவனத்தில் கொள்ளக் கூடிய அரசாங்க வருமானம் வருடாந்தம் இழக்கப்பட்டிருந்தது.	1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்த) சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டண திருத்தத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் மிகுதி நடவடிக்கைகளுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு 2025.05.08 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது.	தாமதம் இன்றி கட்டணத்தை திருத்துவதன் மூலம் வருமான இழப்பை தவிர்த்தல் வேண்டும்.
(ஆ)	துப்பாக்கி அனுமதிப் பத்திர கட்டளைச் சட்டத்தின் 182 ஆம் அதிகாரத்தின் 27 ஆம் பந்தியின் பிரகாரம் அனுமதிப் பத்திர அதிகாரியினால் துப்பாக்கி சம்பந்தமாக ''அ'' பட்டோலையின் ''கா'' படிவத்திற்கு இணங்க சகல துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான பதிவேடு பேணிச்	பயிர்ப் பாதுகாப்பு மற்றும் ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக விநியோகிக்கப்பட்ட துப்பாக்கிகளின் எண்ணிக்கை மாவட்ட செயலகங்கள் மூலம் விவசாய ரீதியான மற்றும் விவசாய ரீதியற்ற துப்பாக்கிகள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கும் சரியான	ஆவணங்களுக்கு இடையேயான முரண்பாடுகள் தொடர்பாக சரியான பரிசோதனை மேற்கொண்டு சரியான பதிவேடுகள்

செல்லப்பட வேண்டியிருந்ததுடன் அந்த பதிவேட்டின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 வரை விவசாய ரீதியான மற்றும் விசயாய ரீதியற்ற (பயிர் பாதுகாப்பு மற்றும் ஆதன பாதுகாப்பிற்காக) பணிகளுக்காக விநியோகிக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 25,064 ஆக அறிக்கையிடப்பட்ட போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகங்களின் பிரகாரம் துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையைக் காண்பிக்கப்படுகின்ற ஏடுகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்களில் 12,981 வேறுபாடு காணப்பட்டது.	எண்ணிக்கையை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	பேணிச் செல்லப்படல் வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரை**
பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள இடர் முகாமைத்துவ பிரிவு மற்றும் ஏனைய 06 நிறுவனங்களுக்கு முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய படையணிகள் 647 பேர் நியமிக்கப்பட்டிருந்த போதும் அந்த பதவியணியினரை ஈடுபடுத்துவதற்கான அங்கீகாரம் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த அங்கீகாரத்துடன் போதியளவான பதவியணியினர் ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும்.